ஓட்டல், பார்களில் மாமூல் வசூலித்து

மாதம் ரூ.100 கோடி தரும்படி போலீசிடம் கேட்ட மராட்டிய முன்னாள் மந்திரி கைது

அமலாக்க பிரிவு நடவடிக்கை

மும்பை, நவ. 2–

மராட்டிய மாநிலத்தில் சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடந்து வருகிறது.

வெடிகுண்டு ஜீப்

இதில் உள்துறை மந்திரியாக இருந்தவர் அனில் தேஷ்முக். இவர் தேசியவாத காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர். மும்பையில் உள்ள தொழில் அதிபர் முகேஷ் அம்பானி வீட்டின் அருகே கடந்த பிப்ரவரி 25–ந் தேதி மர்ம ஜீப் ஒன்று நின்றிருந்தது.

அதில் வெடிகுண்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. போலீசாரின் அலட்சியத்தால் தான் வெடிகுண்டு வைக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. அப்போது மும்பையில் போலீஸ் கமிஷனராக பரம்வீர்சிங் இருந்து வந்தார்.

ரூ.100 கோடி லஞ்சம்

அவரை வேறு துறைக்கு மாற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதை தொடர்ந்து பரம்வீர்சிங், உள்துறை மந்திரி அனில்தேஷ்முக் மீது பரபரப்பான குற்றச்சாட்டு ஒன்றை கூறினார்.

மும்பை போலீசார் மூலம் ஓட்டல்கள், பார்கள் மற்றும் பல்வேறு இடங்களில் இருந்து மாதம் ரூ.100 கோடி வசூலித்து தர வேண்டும் என்று உள்துறை மந்திரி கூறினார். அதை ஏற்க மறுத்ததால் என் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்று பரம்வீர்சிங் கூறினார்.

சி.பி.ஐ. விசாரணை

இந்த பிரச்சினை மராட்டியத்தில் பூதாகரமாக மாறியது. இதற்கிடையே இது சம்பந்தமாக மும்பை ஐகோர்ட்டில் அனில்தேஷ்முக் லஞ்சம் கேட்டது தொடர்பாக வழக்குகள் தொடரப்பட்டன. மும்பை ஐகோர்ட்டு இது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும் படி உத்தரவிட்டது.

இதனால் அனில்தேஷ்முக் உள்துறை மந்திரி பதவியில் இருந்து ராஜினாமா செய்தார். அவர் மீது சி.பி.ஐ. மற்றும் அமலாக்கப் பிரிவினர் விசாரணை நடத்தி வந்தனர்.

அமலாக்க பிரிவு விசாரணை நடத்தியதில் சில ஆதாரங்கள் சிக்கின. மும்பை சப்–இன்ஸ்பெக்டர் சச்சின்வாசி என்பவர் பல்வேறு இடங்களில் மாமூல் வசூல் செய்து அனில்தேஷ்முக்குக்கு வழங்கியதை கண்டுபிடித்தனர்.

நடன பாரில் ரூ.4 கோடி

முகேஷ் அம்பானி வீட்டு அருகே வெடிகுண்டு ஜீப் நின்ற விஷயத்திலும் சச்சின்வாசிக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. சமீபத்தில் மும்பையில் உள்ள ஒரு நடன பாரை சுமூகமாக நடத்துவதற்காக அதன் உரிமையாளரிடம் சச்சின்வாசி ரூ.4 கோடியே 18 லட்சம் வசூலித்து அதை அனில்தேஷ்முக்குக்கு ரகசியமாக வழங்கி உள்ளார்.

அனில்தேஷ்முக்

நாக்பூரில் அனில்தேஷ்முக் குடும்பத்தினர் ஸ்ரீசாய் சிக்ஷான் சான்ஸ்தா என்ற அறக்கட்டளையை நடத்துகிறார்கள். நடன பார் நிறுவனம் வழங்கிய அந்த பணம் டெல்லியில் உள்ள போலி நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து இந்த அறக்கட்டளைக்கு நன்கொடையாக மாற்றப்பட்டு இருக்கிறது. அதன் பிறகு அந்த பணத்தை ஹவாலா மூலம் டெல்லிக்கு அனுப்பி அனில்தேஷ்முக்கின் மகன் ஹரிஸ்தேஷ்முக்குக்கு வழங்கி இருக்கிறார்கள்.

சட்டவிரோத பணபரிமாற்றங்கள்

இதை அமலாக்கப்பிரிவு தெளிவாக கண்டுபிடித்தது. இதுபோல பல பண பரிமாற்றங்கள் சட்டவிரோதமாக மாற்றப்பட்டு இருப்பதையும் அமலாக்கப்பிரிவு கண்டு பிடித்தது.

இது சம்பந்தமாக விசாரிப்பதற்காக அமலாக் கப்பிரிவினர் அனில்தேஷ் முக்குக்கு சம்மன் அனுப்பினார்கள்.

என் மீது பொய்யான குற்றச்சாட்டுகளை அமலாக்கப்பிரிவு கூறுகிறது. வேண்டுமென்றே திட்டம் தீட்டி இந்த மோசடியை பதிவு செய்து இருக்கிறார்கள். எனவே நான் அமலாக்கப்பிரிவு முன்பு ஆஜராக மாட்டேன் என்று அனில்தேஷ்முக் கூறினார்.

இதைதொடர்ந்து அடுத்தடுத்து 4 சம்மன்களை அமலாக்கப்பிரிவு அனுப்பியது. இதற்கிடையில் மும்பை ஐகோர்ட்டில் அமலாக்கப் பிரிவு சம்மனை ரத்து செய்யும்படி அனில்தேஷ்முக் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கை கடந்த வாரம் தள்ளுபடி செய்து ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

விசாரணை–கைது

இதைதொடர்ந்து நேற்று அனில்தேஷ்முக் அமலாக்கப் பிரிவு அலுவலகத்தில் ஆஜரானார். அவரிடம் அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் 12 மணிநேரம் விசாரணை நடத்தினார்கள். இரவு வரை இந்த விசாரணை நீடித்தது.

அவர் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்ததாக அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் கூறினார்கள். விசாரணையின் முடிவில் அனில் தேஷ்முக்கை கைது செய்தனர். நேற்று இரவு அவர் அமலாக்கப்பிரிவு அலுவலகத்திலேயே தங்க வைக்கப் பட்டார்.

இன்று கோர்ட்டில் ஆஜர்படுத்தப்படுத்தப் படுகிறார். அப்போது மீண்டும் காவலில் எடுத்து விசாரிக்க அமலாக்கப் பிரிவினர் அனுமதி கேட்க இருக்கிறார்கள்.

ஒருவேளை அமலாக்கப் பிரிவு காவலுக்கு கோர்ட்டு அனுப்ப மறுத்தால் அவர் ஜெயிலுக்கு அனுப்பப் படுவார். அல்லது ஜாமீன் கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது.

கிருஷ்ணகிரியில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு

6 தொகுதிகளில் 16 லட்சத்து 7 ஆயிரத்து 281 வாக்காளர்கள்

கிருஷ்ணகிரி, நவ.2–.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம் 2022 பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, நேற்று அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் வரைவு வாக்காளர் பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ஜெயசந்திரபானு ரெட்டி வெளியிட்டார். அதில், ஊத்தங்கரை (தனி), பர்கூர், கிருஷ்ணகிரி, வேப்பனப்பள்ளி, ஓசூர், தளி உள்ளிட்ட 6 தொகுதிகளில் 8 லட்சத்து 8 ஆயிரத்து 781 ஆண் வாக்காளர்களும், 7 லட்சத்து 98 ஆயிரத்து 220 பெண் வாக்காளர்கள், 280 இதரர் உட்பட 16 லட்சத்து 7 ஆயிரத்து 281 வாக்காளர்கள் உள்ளனர்.

இது குறித்து மாவட்ட கலெக்டர் கூறியதாவது: சட்டப்பேரவை தேர்தலின் போது வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலுக்கு பிறகு தொடர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்த்தல் மற்றும் இறந்த மற்றும் வெளியூர் சென்ற நபர்களை நீக்கம் செய்ததன் அடிப்படையில் புதியதாக 2001 நபர்கள் நாளது வரை வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போது நடைபெறவுள்ள சிறப்பு சுருக்கமுறைத் திருத்தின்படி 01.01.2022ன்படி 18 வயது பூர்த்தியடையும் அனைத்து இளம் வாக்காளர்களும் வாக்காளர் பட்டியில் தங்களது பெயர்களை சேர்த்துக் கொள்ள தகுதியுடையவர்கள். மாவட்டத்திலுள்ள அனைத்து கல்லூரிகளிலும், வளாக தூதர்கள், ஒருங்கிணைப் பாளர்கள் நியமனம் செய்யப்பட்டு இளம் வாக்காளர்களை அடையாளம் கண்டு வாக்காளர் பட்டியலில் சேர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் மேற்கொள்ள பணிகள் வருகிற 30–ம் தேதி வரை மனு செய்து சேர்த்துக் கொள்ளலாம். வருகிற 13ம், 14ம் மற்றும் 27ம், 28ம் தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம் நடைபெறும். எனவே, அனைத்து வாக்காளர்களும் இந்த சிறப்பு முகாம்களை பயன்படுத்தி வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களை சேர்த்து ஜனநாயக கடமையை ஆற்றிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

வாழைத்தார்களை அதிகாரிகள் ஆய்வு செய்த போது எடுத்த படம்.

காரிமங்கலத்தில்

ரசாயனம் தெளிக்கப்பட்ட வாழைத்தார்கள் பறிமுதல்

காரிமங்கலம்,நவ.2–

தருமபுரி மாவட்டம் காரிமங்கலம பேரூராட்சியில் உள்ள பழக்கடைகளில் ரசாயனம் தெளிக்கப்பட்டு வாழைப்பழங்கள் பழுக்க வைத்து விற்பனை செய்வதாக மாவட்ட கலெக்டருக்கு புகார் வந்தது. அதன்பேரில் உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் பானு சுஜாதா உத்தரவிட்டார்.

வாழைத்தார் பறிமுதல்

இதையடுத்து காரிமங்கலம் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்த கோபால் மற்றும் பேரூராட்சி பணியாளர்கள் பாலக்கோடு ரோடு கடைவீதி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வாழைப்பழ கடைகள் மற்றும் குடோன்களில் தீவிர சோதனை மேற்கொண்டனர்.

அப்போது ரசாயனம் தெளிக்கப்பட்டு வாழைத்தார்கள் பழுக்க வைத்து விற்பனை செய்தது தெரியவந்தது. இதையடுத்து வாழைப்பழ தார்கள் பறிமுதல் செய்யப்பட்டு பேரூராட்சி தூய்மைப் பணியாளர்கள் மூலம் அழிக்கப்பட்டது மேலும் இதுதொடர்பாக இருவர் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டது.

இதேபோல் காரிமங்கலம் பெரியாம்பட்டி மாட்லாம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள பேக்கரிகள் மற்றும் ஹோட்டல்கள் ஆகியவற்றில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

நல்லம்பள்ளியில்

கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி

தொப்பூர், நவ.2–

நல்லம்பள்ளியில் 65 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை துறை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட பணிகள் மூலம் போஷன் அபியான் திட்டத்தின் கீழ் 65 பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நல்லம்பள்ளியில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் போஷன் அபியான் திட்டத்தின் மேற்பார் வையாளர் சந்திரா அரசு மருத்துவமனை மருத்துவர் நாகமணி ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்ட அலுவலர் ஆனந்த கிருஷ்ணன் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெண்ணாம்பள்ளி அரசு பள்ளியில் மாணவ, மாணவிகளை பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சேகர் பூங்கொத்து, இனிப்பு வழங்கி வரவேற்றார்.

பர்கூர் பகுதியில்

பள்ளிகளுக்கு வந்த மாணவர்களுக்கு வரவேற்பு

கிருஷ்ணகிரி, நவ.2–

கொரோனா தாக்கம் குறைந்ததை முன்னிட்டு 20 மாதங்களுக்கு பிறகு நேற்று 1–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்புகள் வரை செயல்பட தொடங்கியது.

அதன்படி பர்கூர் ஒன்றியம் சூரன்குட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி 20 மாதங்களுக்கு பிறகு நேற்று திறக்கப்பட்டது. இதையொட்டி மாணவ, மாண விகள் உற்சாகமாக பள்ளிக்கு வந்தனர். அவர்களை பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவரும், முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான சேகர் தலைமையில் நிர்வா கிகள் பூங்கொத்து, இனிப்பு வழங்கி வரவேற்றனர். தொடர்ந்து மாணவ, மாணவிகளுக்கும் வெப்ப நிலை பரிசோதனை செய்யப்பட்டது. மேலும் மாணவ, மாணவிகளுக்கு முக கவசம் அணிவிக்கப்பட்டு பள்ளிக்குள் அனுமதிக்கப் பட்டார்கள். இந்த நிகழ்ச்சியில் ஊர்கவுண்டர் சீனிவாசன், கலைச்செல்வி, தலைமை ஆசிரியர் ஆஞ் சலின், உதவி ஆசிரியர் பாத்திமா, சுகுணா, சாந்தா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பர்கூர் ஒன்றியம் வெண்ணாம்பள்ளி அரசினர் உயர்நிலைப்பள்ளி நேற்று திறக்கப்பட்டது. இதையொட்டி பள்ளிக்கு வந்த மாணவ, மாணவிகளை பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சேகர் தலைமையில் பூங்கொத்து, இனிப்புகள் வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் தொடக்கப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் முருகேசன், கவுன்சிலர் ரவி, பாலேப்பள்ளி ஊராட்சி வார்டு உறுப்பினர் வெங்கடேசன், பள்ளியின் தலைமை ஆசிரியர் நேசபிரபா, ஆசிரியர்கள் ராமசந்திரன், சகாய ஆரோக்கியராஜ், சிவகாமி உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.

சித்திரை ஆட்ட திருநாள் பூஜைக்காக

சபரிமலை கோவில் நடை இன்று திறப்பு

நாளை தரிசனம் செய்ய 15ஆயிரம் பக்தர்களுக்கு அனுமதி

திருவனந்தபுரம், நவ.2–

சபரிமலை அய்யப்பன் கோவிலில் இந்த ஆண்டுக்கான மண்டல பூஜை வருகிற 16–ந்தேதி தொடங்குகிறது. இதனை முன்னிட்டு வருகிற 15–ந்தேதி மாலை கோவில் நடை திறக்கப்படுகிறது.

மண்டல–மகரவிளக்கு பூஜைகளுக்கு முன்பதிவு

இந்த ஆண்டில் மண்டல மற்றும் மகரவிளக்கு பூஜை காலத்தில் சாமி தரிசனம் செய்ய தினமும் 25 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். சாமிதரிசனத்துக்கு பக்தர்கள் ஆன்லைனில் முன்பதிவு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதன்படி பக்தர்கள் முன்பதிவு செய்து வருகிறார்கள்.

கொரோனா கட்டுப்பாடுகளின் படி தற்போது வரை நடைமுறையில் உள்ள

2 டோஸ் கொரோனா தடுப்பூசி செலுத்தியதற்கான சான்றிதழ் அல்லது 72 மணி நேரத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட ஆர்.டி.பி.சி.ஆர். நெகட்டிவ் சான்றிதழை பக்தர்கள் கட்டாயம் வைத்திருக்க வேண்டும்என்றும், அவை இல்லாதபக்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப் பட்டு உள்ளது.

நடை திறப்பு

இந்த நிலையில் சித்திரை ஆட்ட திருநாள் பூஜை நாளை (3–ந்தேதி) நடக்கிறது. இதற்காக சபரிமலை அய்யப்பன் கோவில் நடை இன்று மாலை திறக்கப்படுகிறது. நாளை சித்திரை ஆட்ட திருநாள் சிறப்பு பூஜைகள் நடைபெறும். நாளை ஒருநாள் மட்டுமே கோவில் நடை திறந்திருக்கும்.

இந்த பூஜையில் பங்கேற்க பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. சாமி தரிசனம் செய்ய 15 ஆயிரம் பக்தர்கள் அனுமதிக்கப்பட உள்ளனர். பூஜைகளுக்கு பிறகு இரவு 9 மணிக்கு நடை சாத்தப்படுகிறது.

கேரளாவில் லவ் ஜிகாத் பற்றி சர்ச்சை பேச்சு:

கிறிஸ்தவ பிஷப் மீது வழக்கு

கோர்ட்டு உத்தரவுப்படி போலீசார் நடவடிக்கை

திருவனந்தபுரம், நவ.2–

கேரளாவில் பாலா மறைமாவட்ட சீரோ மலபார் ஆலய ஆயராக இருப்பவர் மார் ஜோசப் கள்ளரங்காடு.

லவ் ஜிகாத் பற்றி பேச்சு

கோட்டயத்தில் உள்ள ஒரு ஆலயத்தில் கடந்த 2 மாதங்களுக்கு முன்பு நடந்த திருப்பலியில் ஆயர் மார் ஜோசப் கள்ளரங்காடு பேசிய போது கிறிஸ்தவ பெண்களை போதை பொருளுக்கு அடிமையாக்கி ஒரு பிரிவினர் மத மாற்றம் செய்வதாக கூறினார்.

லவ் ஜிகாத் என்ற பெயரிலும், போதை ஜிகாத் என்ற பெயரிலும் இதுபோன்ற சம் பவங்கள் நடக்கிறது. இது குறித்து கிறிஸ்தவ பெண்கள் கவனமுடன் இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

முஸ்லிம்கள் போராட்டம்

ஆயர் மார் ஜோசப் கள்ளரங்காடின் இந்த பேச்சுக்கு காங்கிரஸ் கட்சியினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் முஸ்லிம் அமைப்பினரும் கண்டனம் தெரிவித்தனர். அவர்கள் ஆயர் மார் ஜோசப் கள்ளரங்காடை கண்டித்து போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.



மார் ஜோசப் கள்ளரங்காடு

இதற் கிடையே ஆயர் மார் ஜோசப் கள்ளரங்காடு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அகில இந்திய இமாம் கவுன்சில் சார்பில் அதன் மாவட்ட தலைவர் அப்துல் அசீஸ் என்பவர் குருவிலாங்காடு போலீசில் புகார் செய்தார்.

கோர்ட்டு உத்தரவு

குருவிலாங்காடு போலீசார் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என தெரி கிறது. இதையடுத்து இமாம் கவுன்சில் சார்பில் பாலா மாஜிஸ்திரேட் கோர்ட்டில் அப்துல் அசீஸ் மனு செய்தார். இம்மனுவை விசாரித்த கோர்ட்டு , புகார் தொடர்பாக போலீசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உத்தரவிட்டது.

ஆயர் மீது வழக்கு

கோர்ட்டு உத்தரவை தொடர்ந்து குருவிலாங்காடு போலீசார், பாலா மறை மாவட்ட ஆயர் மார் ஜோசப் கள்ளரங்காடு மீது மத ஒற்றுமையை குலைக்க முயற்சித்ததாக வழக்குப்பதிவு செய்தனர். ஆயர் மீது வழக்கு தொடரப்பட்டிருப்பது கேரளாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

மாலை மலர்
விளம்பரம்
பேப்பர் விற்பனை
ஆண்டு சந்தா
விவரங்களுக்கு
TOLL FREE
1800 425 5488
10.00 A.M-6.00 P.M
அழைக்கவும்

ஓசூர் அருகே

விவசாயிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்காவிட்டால் போராட்டம்

தமிழக விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

ஓசூர்,நவ.2–

தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் மாவட்ட தலைவர் ஸ்ரீராமரெட்டி தலைமையில் சங்க நிர்வாகிகள், 15 கிராமங்களில் வாழும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் நல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டும் என்று ஓசூர் உதவி கலெக்டர் அலுவலகத்தில் நேற்று கோரிக்கை மனு அளித்தனர்.

பின்னர் ஸ்ரீராம ரெட்டி கூறியதாவது: " நல்லூர் கிராமத்தில் துணை மின் நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், ஓசூர் பகுதிகளில் வாழும் விவசாயிகள் தட்கல் முறையில் மின் இணைப்பு பெற பல லட்சம் ரூபாய் பணம் செலுத்தி மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்து பதிவு செய்துள்ளனர்.

மின்கம்பிகள், மின்கம்பங்கள் மற்றும் மின் தளவாட பொருள்கள் இல்லை என காரணம் காட்டி, நீண்ட நாட்களாகியும் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்காமல் மின்சார வாரியம் காலம் தாழ்த்தி வருகிறது. எனவே உடனடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் தமிழக விவசாய சங்கம் சார்பில் போராட்டங்கள் நடத்தப்படும்."

இவ்வாறு அவர் கூறினார்.

வருவாய் கோட்ட அலுவலர்
கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு.4994/2021
நாள்: 21.10.2021
P.இளங்கோ
த/பெ. பச்சியப்பன்
3/219, தாதன்கொட்டாய்
தளி அள்ளி (Po)
கிருஷ்ணகிரி (Tk & Dt).
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள்
கிருஷ்ணகிரி.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் P.இளங்கோ தனது அன்னார் நாகராஜ் என்பவர் 12.07.1987 அன்று மேற்படி விலாசத்தில் இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வருவாய் கோட்ட அலுவலர்
கிருஷ்ணகிரி

கனம் சப்–ஜட்ஜ் கோர்ட்டார்
சமூகம், ஓமலூர்.
M.C.O.P. 141 / 2018
1. லதா, க/பெ.சின்னண்ணன்,
2. சின்னண்ணன், த/பெ. (லேட்) முத்து
3. விஜியகுமார், த/பெ. சின்னண்ணன்
130, போதுகாடு, காருவள்ளி,
மரக்கோட்டை கி
காடையாம்பட்டி, Tk, சேலம் Dt.
– மனுதாரர்கள்
- Vs -
அயுஸ்பதான், பா/பெ. க்ரம்,
த/பெ. முகமது உனிஸ்,
261, Rehti Dist, Sehore Bhopal Dt, MP
– 1ம் எதிர்மனுதாரர்
அறிவிப்பு
கடந்த 29.11.2017ம் தேதி நடந்த மோட்டார் வாகன விபத்தில் 1,2 மனுதாரர்களின் மகனும், 3–ம் மனுதாரரின் சகோதரருமான குணசேகரன் இறந்ததற்காக நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட தங்களின் M.P-09 HF 7605 லாரி என்பதால் மேற்படி வழக்கில் தாங்களை 1–ம் எதிர்மனுதாரராக தரப்பினராக சேர்த்துள்ளார்கள். மேற்படி வழக்கு வருகிற 18–11–2021 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு தாங்களோ தங்களின் வழக்கறிஞரோ நேரில் ஆஜராகி தங்கள் தரப்பு ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் உங்களுக்கு விரோதமாக தீர்ப்பாகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.
/கோர்ட்டார் உத்தரவுப்படி/
Lr.L.Dhanakoteeswaran, B.A.B.L.,
Advocate, Kadayampatty, Salem.

வட்டாட்சியர் அலுவலகம்
சூளகிரி
மே.எ.அ.தி.மு.129/2021
நாள்: 17.09.2021
வெங்கடேஷ்
த/பெ. குண்டப்பா
2/282, சீகுணப்பள்ளி (Vill)
சாமனப்பள்ளி (Po)
சூளகிரி (Tk).
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர் அவர்கள்
சூளகிரி.
– எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் வெங்கடேஷ் தனது தாத்தா சொக்கப்பன் என்பவர் 11.03.1987 அன்று மேற்படி விலாசத்தில் இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப் பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.
இங்ஙனம்,
வட்டாட்சியர் அலுவலகம்
சூளகிரி

ENROLMENT NOTICE
After ten days of the publication of this notice and Within Three Months thereafter,
I, YESHWANTH S. S/o. D.M.Shivashankar, Flot no: 3A, CS Nagar Main, Prakesh Nagar, Denkanikotta Road, Hosur Town and Taluk, Krishnagiri District.635109. intend Having my enrolment as an Advocate moved before the Bar Council of Tamil nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-104.
Those Who have any valid Objections may Notify the same to the Bar Council within 10 days.
YESHWANTH S.

TANEJA AEROSPACE AND AVIATION LIMITED
Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India | Phone : 04347-233508 | Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in | Website : www.taal.co.in | CIN : L62200TZ1988PLC014460
EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2021
(Rs. in Lacs, unless otherwise stated)

Sr. No.	Particulars	Quarter Ended		Half Year Ended	Year Ended
		30-Sep-21	30-Sep-20	30-Sep-21	31-Mar-21
		(Unaudited)	(Unaudited)	(Unaudited)	(Audited)
1	Total Income from operations (Net)	817.52	1,125.89	1,439.56	3,481.50
2	Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items)	365.46	260.46	598.06	826.79
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items)	365.46	260.46	598.06	826.79
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items)	305.45	228.04	504.36	621.85
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	305.45	228.04	504.36	620.12
6	Equity share capital	1,246.54	1,246.54	1,246.54	1,246.54
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year				9,210.06
8	Earnings Per Share (of Rs. 5/- each) (not annualised):				
	(a) Basic earnings / (loss) per share (INR)	1.22	0.91	2.02	2.49
	(b) Diluted earnings / (loss) per share (INR)	1.22	0.91	2.02	2.49

Notes :
1 Additional information on standalone financial results is as follows:

Particulars	Quarter Ended		Half Year Ended	Year Ended
	30-Sep-21	30-Sep-20	30-Sep-21	31-Mar-21
Revenue from Operations	798.21	1,124.68	1,395.82	3,452.01
Profit before tax	365.48	260.46	598.09	827.69
Profit after tax	305.47	228.04	504.39	622.75

2 The above is an extract of the detailed format of quarter and half year ended Financial Results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the quarterly and half yearly Financial Results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).
3 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on November 01, 2021.
For Taneja Aerospace and Aviation Limited
Ramesh Jaiswara
Whole time Director
Place : Bangalore
Date : November 01, 2021